வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 11.10.2025 சனிக்கிழமை இதழ் : 284 பக்கங்கள் : 08

## பெரும் பொருளாதார சவாலுக்குள் 2028 இல் நாடு சிக்கும் அபாயநிலை!

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

கொழும்பு, ஒக். 11

தற்போதைய வேகத்தில் அரசாங்கம் பயணிக்குமானால் இலங்கை 2028ஆம் ஆண்டு கடன் திருப்பிச் செலுத்தும் காலத்தில் பெரும் பொருளாதார சவாலை எதிர் கொள்ளும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசாங்கத்தின் கொள்கை அறிக்கையில் புதிய ஐ. எம். எவ். நிபந்தனைகளின் கீழ் ஒரு புதிய கடன் மறுசீரமைப்பு ஏற்பாடு பற்றி குறிப்பிடப்பட்டாலும் நடைமுறையில்

07

## அமைச்சரவையில் நேற்று மாற்றம்!

கொழும்பு, ஒக். 11

அமைச்சரவையில் மாற்றம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 2026 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்திற்கு ஏற்ப அரசாங்கத்தின் வளர்ச்சி இலக்குகளை விரைவுபடுத்துவதற்கும் திறம்படச் செய்வதற்கும் அமைச்சரவையில் மாற்றம் மேற்கொள்ள அரசாங்கம் முடிவு செய்த நிலையில் புதிய அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்கள் நேற்று காலை ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டனர்.

அதன்படி பிமல் நிரோஷன் ரத்நாயக்க போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சராக சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார்.

அநுர கருணாதிலக - துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான போக்குவரத்து அமைச்சராக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

வைத்தியர் எச். எம். சுசில்

07

## அரசின் பணிகளை துரிதப்படுத்தவே அமைச்சரவையில் மாற்றம் நிகழ்ந்தது!

### அமைச்சர் லால் காந்த விளக்கம்



கொழும்பு, ஒக்ரோபர் 11

**அரசாங்கத்தின் பணிகளை துரிதப்படுத்தும் நோக்கில், அரசியலமைப்புச் சட்டத்தின் அடிப்படையில், புதிய அமைச்சரவை மாற்றம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக விவசாய, காணி மற்றும் நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கே.டி. லால் காந்த தெரிவித்துள்ளார்.**

கண்டியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கருத்துரைத்த அவர், அமைச்சர்களின் எண்ணிக்கை எந்த நிலையிலும் 25 என்ற எண்ணிக்கையில் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசாங்கத்தின் பணிகளை துரிதமாக முன்னெடுக்க தேவையான பணியாளர்கள் மற்றும் பொறுப்பாளர்கள் சிலரை நியமிக்கவேண்டிய அவசியம் இருந்தது.

அதற்கேற்பவே இன்று சில பொறுப்புகள் புதியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன - என்றார்.

(அ)

## இலக்குகளை அடையவே அமைச்சரவை மாற்றம்!

### அரசாங்கம் விளக்கம்

கொழும்பு, ஒக். 11

அமைச்சர் பிமல் ரத்நாயக்கவிடம் இருந்து துறைமுகம் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சு நீக்கப்படவில்லை. ஆனால் அரசாங்கத்தின் இலக்குகளை மிகவும் திறம்பட அடையும் வகையில் மட்டுமே அமைச்சுகள் மாற்றியமைக்கப்பட்டதாக நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சர் அனில் ஜெயந்த தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்றைய விவாதத்தின்

07

## பேச்சுக்களின் பின்னரே அமைச்சரவை மாற்றம்!

### அமைச்சர் பிமல் கூறுகிறார்

கொழும்பு, ஒக். 11

தான் எதிர்க்கட்சியினரிடம் சான்றிதழ் பெற்றுக் கொள்வதற்கு வேலை செய்பவனல்லன் என போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

புதிய அமைச்சு பொறுப்புக்களை ஏற்றுக் கொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

07

## சமஷ்டி வழிக்கு வந்துள்ள கஜேந்திரகுமாருக்கு நன்றி!

### சீ.வீ.கே. சிவஞானம் கூறுகிறார்

- த.பிரதீபன் -



யாழ்ப்பாணம், ஒக். 11

எங்கள் கட்சிக் கொள்கையான சமஷ்டி வழிக்கு வந்த கஜேந்திரகுமாருக்கு நன்றி. சமஷ்டியை நாங்கள் விட்டுக் கொடுக்கவில்லை. தமிழ் அரசுக் கட்சியை மலினப்படுத்தி அழித்து விடலாம் என்பது பகல் கனவே என தமிழ் அர சுக் கட்சியின் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப் பில் கருத்து தெரிவித்த போதே அவர்

07

## ஊழல் எதிர்ப்பை வலுப்படுத்துக! நாணய நிதியம் அரசிடம் வலியுறுத்து

கொழும்பு, ஒக். 11

ஊழல் எதிர்ப்பு நிறுவனத்தை வலுப்படுத்தவும் வழக்குகளை விரைவுபடுத்தவும் சர்வதேச நாணய நிதியம் இலங்கையிடம் கோரியுள்ளது.

2023ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட பிணை எடுப்பு மீளாய்வுக்குப் பின்னர் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் சீர்திருத்தங்கள் பலனளித்துள்ளன. எனினும், உலகளாவிய வர்த்தக நிச்சயமற்ற தன்மைகளால் ஏற்படும் அதிகரித்த கீழ்நோக்கிய அபாயங்களுக்கு மத்தியில் இலங்கை தமது வேகத்தைத்தக்க வைத்துக் கொள்ள வேண்டும் என்றும் சர்வதேச நாணய நிதியம் வலியுறுத்தியுள்ளது.

இலஞ்சம், ஊழல் ஒழிப்பு ஆணைக்

07

## யாழில் மருந்து மாத்திரைகளை அதிகமாக உண்ட பெண் மரணம்!


யாழ்ப்பாணம், ஒக். 11

யாழில் அதிகளவான மாத்திரைகளை உட்கொண்ட வயோதிபப் பெண் ஒருவர் நேற்று அதிகாலை உயிரிழந்துள்ளார். மானிப்பாய் - சாத்தாவத்தை பகுதியை சேர்ந்த பாலசுந்தரம் சிந்தாத்துரைமேரி (வயது 69) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த பெண் மனநலம் பாதிக்கப்பட்ட நிலையில் தெல்லிப்பளை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்துள்ளார். இந்நிலையில் தெல்லிப்பழை வைத்திய சாலையில் கொடுத்த மாத்திரைகளை

07

## அமைதிக்கான நோபல் பரிசு வெனிசுவெலாவின் மரியாவுக்கு!



ஒஸ்லோ, ஒக். 11

2025ஆம் ஆண்டுக்கான அமைதிக்கான நோபல் பரிசு வெனிசுலா நாட்டில் ஜனநாயகம் மலர தொடர்ந்து போராடிய, வெனிசுலாவின் 'இரும்புப் பெண் மணி' என்று அழைக்கப் படும் மரியா கொரினா மச்சா டோவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

அமைதிக்கான நோபல் பரிசை தனக்கு வழங்க வேண்டும், அதற்கு எல்லாத் தகுதியையும் பெற்றுவிட்டேன் என்று அமெரிக்க அதிபர் ட்ரம்ப் கூறிவந்த நிலையில், அவருக்கு அந்தப் பரிசு கிடைக்கவில்லை.

07

## ஜெனிவா விவகாரத்தை வைத்து நாம் அரசியல் செய்யமாட்டோம்

### அரசாங்கம் அறிவிப்பு

கொழும்பு, ஒக். 11

ஜெனிவா விவகாரத்தை வைத்து ஒருபோதும் அரசியல் செய்யப்போவதில்லை என்று அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

"ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையும் அங்கு மேற்கொள்ளப்படும் தீர்மானங்களும் அரசியல் இருப்புக்காகவே கடந்த காலங்களில் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன. அவ்வாறான செயல்பாடுகளில் நாங்கள் ஒருபோதும் ஈடுபடப் போவதில்லை.

07

## தையிட்டி விகாரை சர்ச்சை; எதிர்வரும் வாரங்களில் தீர்வு

கொழும்பு, ஒக். 11

யாழ்ப்பாணம் தையிட்டி விகாரை தொடர்பான சர்ச்சைக்கு எதிர்வரும் சில வாரங்களுக்குள் தீர்வு பெற்றுக் கொடுக்கப்படவுள்ளதாக அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன் னம்பலம் முன்வைத்த குற்றச்சாட்டுக்குப் பதிலளித்து பாராளுமன்றத்தில் உரையாற்றும்

07

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னாரில் காற்றாலை அமைப்பதில் மிக திடமாக இருக்கிறது அரசாங்கம்!

## மன்னார் மறைமாவட்ட ஆயர்

மன்னார், ஒக். 11

ஜனாதிபதியை சந்தித்து மன்னார் மக்கள் ஏன் காற்றாலை வேண்டாம் என கூறுகிறார்கள் என்பதை தெளிவுபடுத்தினேன். எனினும் குறித்த 14 காற்றாலைகளையும் மன்னாரில் அமைப்பதில் அவர்கள் மிகவும் திடமாக இருக்கிறார்கள் என மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு அந்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசம் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

மன்னார் பிரஜைகள் குழுவில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை சர்வமதக் குழு, பொது அமைப்புக்கள், போராட்டக்குழு ஆகியவற்றுடன் நடைபெற்ற கலந்துரையாடலின்போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-


நான் ஜனாதிபதியை சந்தித்தேன். இதன்போது காற்றாலை தொடர்பான எமது பிரச்னையை அவரிடம் முன் வைத்தேன். இந்த விடயம் குறித்து கதைத்தபோது அரசாங்கத்தின் நிலைப்பாடு, அவர்கள் குறித்த 14 காற்றாலைகளையும் மன்னாரில் அமைப்பதில் மிகவும் திடமாக இருக்கின்றார்கள்.

நான் அங்கு எந்தவித ஒப்பந்தங்களையும் செய்யவில்லை. நான் மக்களின் நிலைப்பாட்டையும், மன்னாரில் ஏன் காற்றாலை வேண்டாம் என்று மக்கள் கூறுகிறார்கள் என்ற நிலைப்பாட்டையும் ஜனாதிபதிக்கு தெளிவு படுத்தினேன்.

எனினும் அவருடைய நிலைப்பாடு, குறிந்த 14 காற்றாலைகளையும் அமைத்த பின்னர் மன்னாரில் கனிய மணல் அகழ்வையோ அல்லது மேலதிக காற்றாலைகளையோ ஒருபோதும் அனுமதிப்பதில்லை என்ற வாக்குறுதியை வழங்கினார்.

கனிய மணல் அகழ்வு மன்னாரில் முற்றாக நடக்காது என்பதை ஜனாதிபதி உறுதிப்படுத்தினார்.

இச் சிறிய பகுதியில் கனிய மணல் அகழ்வு மற்றும் மேலதிக காற்றாலை அமைத்தல் போன்ற செயல்பாடுகளுக்கு அனுமதிக்கப் போவதில்லை. அதற்கும் அமைச்சரவை ஊடாக உறுதிமொழி வழங்குவேன் எனக் கூறினார்.




எது எப்படியாக இருந்தாலும் நான் மன்னாரில் மக்களைச் சந்தித்த பின்னர் இதற்கான நடவடிக்கையை எடுக்கலாம் என்று கூறிவிட்டு அங்கிருந்து வந்தேன். நாங்கள் எவ்வித ஆவணத்திலும் கையொப்பம் இடவில்லை-என்றார். (அ)

# தனியார் விடுதிக்கு சிவப்பு அறிவித்தல்

மன்னார், ஒக். 11

மன்னார் சின்னக்கடை பகுதியில் எவ்வித அனுமதியுமின்றி இயங்கிவந்த தனியார் விடுதியொன்றுக்கு மன்னார் நகர சபையினால் சிவப்பு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கு அமைவாக மன்னார் நகர சபையின் தவிசாளர் டானியல் வசந்தன் தலைமையிலான குழுவினர் இந்த விடுதிக்குச் சென்று பார்வையிட்டனர்.

இதன்போது எவ்வித அனுமதியும் இன்றி குறித்த விடுதி அமைக்கப்பட்டு இயங்கி வந்துள்ளமை தெரியவந்துள்ளது.

இந்த கட்டடம் தொடர்பான உரிய ஆவணங்களை எதிர்வரும் 14 தினங்களுக்குள் மன்னார் நகர சபையில் சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

குறித்த தினத்துக்குள் உரிய ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படாத நிலையில் இக்கட்டடம் "அனுமதியற்ற கட்டடம்" என கருதி நகர சபை கட்டளைச் சட்டத்துக்கு அமையவும், நகர அபிவிருத்தி அதிகார சபையின் சட்டத்துக்கு அமையவும், சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு இக்கட்டடம் இடித்து அகற்றப்படும் என மன்னார் நகர சபை அறிவித்துள்ளது.

அத்துடன் இவ்விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ள சிவப்பு அறிவித்தல் விடுதியின் நுழைவாயிலில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை மன்னார் நகர சபை பிரிவில் பல்வேறு தனியார் விடுதிகள் அமைக்கப்பட்டுள்ளபோதும் இந்த தனியார் விடுதிகள் பல, எவ்வித கண்காணிப்புகளும் இன்றி காணப்படுவதனால், இதில் பல்வேறு சமூக சீரழிவுகள் இடம்பெற்று வருவதாகவும் மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (அ)

# மக்களின் உரிமை போராட்டத்தை எவராலும் மலினப்படுத்தமுடியாது!

## கூறுகிறார் செல்வம் அடைக்கலநாதன்

மன்னார், ஒக். 11

மன்னாரில் முன்னெடுக்கப்படும் மக்களின் உரிமை சார் போராட்டத்தை எவரும் மலினப்படுத்த முடியாது என ரெலோ தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மற்றும் மன்னார் மறைமாவட்ட ஆயர் ஆகியோருக்கு இடையில் இடம்பெற்ற சந்திப்பில் தான் கலந்து கொள்ளவில்லை எனவும், எனினும் மக்களின் உரிமைக்கான போராட்டத்தை யாரும் மலினப்படுத்தும் வகையில் நடந்து கொள்ளக்கூடாது எனவும் அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கும் மன்னார் மறை மாவட்ட ஆயர் மேதகு அந்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசம் ஆண்டகைக்கும் இடையில் கடந்த 7 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி செயலகத்தில் விசேட சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இதை நான் ஊடகங்கள் ஊடாக அறிந்து கொண்டுள்ளேன்.

எனினும் குறித்த கூட்டத்தில் நான் கலந்து கொள்ளவில்லை என்பது அனைவருக்கும் தெரிந்த விடயம்.

எனினும் ஊடகங்கள் ஊடாக வெளிவந்த செய்தி உண்மைக்கு புறம்பானது. அன்றைய தினம் ஜனாதிபதி தேநீர் அருந்தும் இடத்துக்கு வருகை தந்தார். அப்போது அவர் என்னை அழைத்து மன்னார் மறை மாவட்ட ஆயருடன் சந்திப்பு ஒன்றை மேற்கொண்டு வந்துள்ளேன் என்று மாத்திரம் என்னிடம் கூறினார்.

மன்னார் காற்றாலை விடயம் தொடர்பாகவும், ஏனைய விடயங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடியதாக அவர் என்னிடம் கூறவில்லை. என்னைப் பொறுத்தவரை மக்களின் போராட்டம் மலினப்படுத்தப்படக்கூடாது. நானும் போராட்டங்களில் கலந்து கொண்டுள்ளேன்.

போராட்டம் முன்னெடுக்கப்பட்டபோது ஓர் இரவு நேரத்தில் காற்றாலை மின் கோபுரங்கள் மன்னார் நகருக்குள் எடுத்துவரப்பட்டபோது மக்கள் எதிர்த்து போராடிய நேரத்தில் நானும் அந்த போராட்டத்தில் கலந்து கொண்டேன்.

இதன்போது மன்னார் தீவுக்குள் கொண்டு வரப்பட்ட காற்றாலைக்கான உபகரணங்கள் கொண்டு வரப்படாமல் தடுத்து நிறுத்தப்பட்டது.

போராட்டம் வலிமை பெறவேண்டும் என்பதில் நான் உறுதியாக இருக்கிறேன்.மக்கள் தொடர்ச்சியாக வருகை தந்து தமது உரிமைக்காக குரல் கொடுத்து வருகின்றனர்.அந்த உணர்வுகள் மலினப்படுத்தப்படக்கூடாது.

எனவே ஜனாதிபதியுடன் மன்னார் மறைமாவட்ட ஆயர் சந்தித்து உரையாடியமைக்கும் எனக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்பதை மக்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்-என்றார். (அ)

# நடந்து சென்ற இளைஞனை மோதித்தள்ளியது வாகனம்!

## தப்பிக்க முயன்ற சாரதியை மடக்கிப் பிடித்தனர் மக்கள்

முல்லைத்தீவு, ஒக். 11

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு கைவேலி பகுதியில் நேற்று முன் தினம் இரவு நடந்து சென்ற இளைஞரை வாகனம் ஒன்று மோதி பெரும் விபத்து ஒன்று இடம்பெற்றுள்ளது.

இவ் விபத்தில் பலத்த காயமடைந்த இளைஞர் மேலதிக சிகிச்சைக்காக மாஞ்சோலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விபத்தை ஏற்படுத்திவிட்டு தப்பிக்க முயன்ற வாகன உரிமையாளர் நகரவாசிகளால் பிடிக்கப்பட்டு புதுக்குடியிருப்பு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

இச் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை புதுக்குடியிருப்பு பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# முல்லைத்தீவு மேலதிக அரசாங்க அதிபர் குணபாலனுக்கு சேவை நலன் பாராட்டு!

முல்லைத்தீவு, ஒக். 11

முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ். குணபாலன் அரச நிர்வாக சேவையில் அதி விசேட தரத்துக்கு தரம் உயர்வு பெற்று வட மத்திய மாகாணத்தின் பிரதிப் பிரதம செயலாளராக பதவி உயர்வு பெற்று கடமை களைப் பொறுப்பேற்றுள்ளார்.



இவருக்கான சேவை நலன் பாராட்டு விழா நேற்று முன் தினம் பி.ப 1.30 மணிக்கு முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் அ.உமாமகேஸ்வரன் தலைமையில் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் மாவட்ட ஊழியர் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் சிறப்பாக நடைபெற்றது.

இந்த சேவை நலன் பாராட்டு விழாவில் மேலதிக மாவட்ட அரசாங்க அதிபர் எஸ். ஜெயகாந்த், பிரதம உள்ளக கணக்காய்வாளர் சற்குணேஸ்வரன், மாவட்ட செயலக பிரதம கணக்காளர் ரஞ்சித் குமார், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர், மாவட்ட உதவிச் செயலாளர், பிரதேச செயலாளர்கள், உதவிப் பிரதேச செயலாளர்கள், உதவித்திட்டமிடல் பணிப்பாளர்கள், பதவிநிலை உத்தியோகத்தர்கள், ஏனைய உத்தியோகத்தர்கள் முதலானோர் கலந்து சிறப்பித்து சேவை சிறக்க வாழ்த்திப் பாராட்டினார்கள். (அ)

# விபத்தில் படுகாயமடைந்த முதியவர் மரணம்!

யாழ்ப்பாணம், ஒக். 11

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்த முதியவர் சிகிச்சை பலனின்றி நேற்று முன் தினம் உயிரிழந்துள்ளார்.

நாயன்மார்கட்டு பகுதியைச் சேர்ந்த 69 வயதுடைய முதியவரே உயிரிழந்தவர் ஆவார்.

இந்த முதியவர் தனது மனைவியுடன் மோட்டார் சைக்கிளில் கடந்த 5ஆம் திகதி புன்னாலைக்கட்டுவன் பகுதியில் வைத்து கன ரக வாகனத்தில் மோதி விபத்துக்குள்ளானார்.

இவ்விபத்தில் கணவன் - மனைவி இருவரும் படுகாயமடைந்த நிலையில், சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். அவர்களில் கணவரே சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பில் சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# பசுமை இயக்கத்தின் சமகால அரசியல் உரையரங்கு ஞாயிறு மாலை நல்லூரில்

யாழ்ப்பாணம், ஒக். 11

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் ஏற்பாட்டில் சமகால அரசியல் தொடர்பான உரையரங்கு நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

இவ்வுரையரங்கு அன்றைய தினம் மாலை 3.00 மணியில் இருந்து மாலை 5.30 மணிவரை பருத்தித்துறை வீதியில், நல்லூர் சட்டநாதர் ஆலயத்துக்கு அருகாமையில் அமைந்துள்ள திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவ்வுரையரங்கில் 'தமிழ் மக்களும் செம்மணியும்' என்ற தலைப்பில் சுயாதீன ஊடகவியலாளர் து. ஜெயராஜ் (ஜெரா), 'தமிழ் மக்களும் தேசிய மக்கள் சக்தியின் ஒருவருடகால ஆட்சியும்' என்ற தலைப்பில் யாழ். பல்கலைக்கழகத்தின் அரசறிவியல்துறையின் முதுநிலை விரிவுரையாளர் பேராசிரியர் கே.ரி. கணேசலிங்கம், 'தமிழ் மக்களும் புதிய அரசியல் அமைப்பும்' என்ற தலைப்பில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோர் உரையாற்ற உள்ளனர்.

இவ்வுரையரங்கு தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தலைமையில் நடைபெறவுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
11.10.2025 சனிக்கிழமை
விசுவாவசு வருடம், புரட்டாதி 25

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## விஜித ஹேரத் கூறுவது கவனத்திற்குரியது

அண்மையில் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் அறுபதாவது கூட்டத் தொடரின்போது, இலங்கை தொடர்பான பிரேரணை வாக்கெடுப்பின்றி நிறைவேற்றப்பட்டது. இலங்கை அரசாங்கம் வாக்கெடுப்பை கோராமையினால்தான் வாக்கெடுப்பு இடம்பெறவில்லை. அரசாங்கத்தின் அணுகுமுறையிலுள்ள இராஜதந்திரம் தொடர்பில் முன்னைய ஆசிரியர் தலையங்கத்தில் பதிவு செய்திருந்தோம்.

ஆனாலும், தென்னிலங்கையின் எதிரணியினர் மற்றும் அரசாங்கம் தொடர்பில் விமர்சனமுள்ள தென்னிலங்கை புத்திஜீவிகள் அரசாங்கத்தின் அணுகுமுறை அதன் இராஜதந்திரத்தின் பலவீனத்தை எடுத்துரைப்பதாக விமர்சித்திருந்தனர். ஜே.வி.பி. தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் உண்மையிலேயே இராஜதந்திரத்தில் பலவீனமாகத்தான் இருக்கின்றதா? இதற்கு வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் பதிலளித்திருக்கின்றார். அந்தப் பதிலில் தமிழ் கட்சிகளுக்கும் ஒரு முக்கிய தகவலுண்டு.

பொதுமக்களின் பணத்தை தேவையற்ற வகையில் செலவழிப்பதை தடுக்கும் நோக்கிலேயே நாங்கள் ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் வாக்கெடுப்பை கோரவில்லை. ஏனெனில், அவ்வாறு கோரியிருந்தாலும் நாங்கள் தோல்விதான் அடைந்திருப்போம். ஒரு விடயத்தில் தோல்விதான் கிடைக்கும் என்றால் அதற்காக மக்களின் நிதியை செலவழிப்பதால் என்ன பயனுண்டு. எனவேதான் நாங்கள் வாக்கெடுப்பை கோரவில்லை - இதன் மூலம், மக்களின் பணம் வீண் விரயமாவது தடுக்கப்பட்டிருக்கின்றது. இராஜதந்திர அணுகுமுறையை தற்போது, நிதித் துஷ்பிரயோகத்தோடும் தொடர்புபடுத்தி அரசாங்கம் பதிலளிக்கின்றது. இந்த விடயத்தில் அரசாங்கத்தின் அணுகுமுறையை பாராட்டித்தான் ஆக வேண்டும்.

2012இல் அப்போதைய ஒபாமா தலைமையிலான அமெரிக்க நிர்வாகத்தினால் கொண்டுவரப்பட்ட இலங்கையின் பொறுப்புக் கூறல் பிரேரணையை தோற்கடிக்க வேண்டும் என்னும் நோக்கில் மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் பெரும் லொபி வேலைகளை முன்னெடுத்திருந்தது.


வெளிநாடுகளிலுள்ள தனியார் லொபி அமைப்புக்களை ஒப்பந்த அடிப்படையில் பணிக்கும் அமர்த்தியிருந்தது. ஆனாலும் ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கையின் மீது பிரேரணைகள் கொண்டுவரப்படுவதை தடுத்துநிறுத்த முடியவில்லை. ஒவ்வொரு முறையும் அரசாங்கங்களின் இலக்கு நிறைவேறவில்லை. ஒப்பீட்டடிப்படையிலான பெரும்பான்மை வாக்குகளுடன் தொடர்ந்தும் பிரேரணை நிறைவேற்றப்பட்டது. இந்தப் பின்புலத்தில் நோக்கினால், தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் அணுகுமுறையானது, இராஜதந்திரரீதியிலும் நிதி முகாமைத்துவ நோக்கிலும் சரியானதே.

இந்த விடயத்தை தமிழர் தரப்புகள் எவ்வாறு நோக்க வேண்டும். ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் அணுகுமுறையில் அடிப்படையான மாற்றங்கள் இல்லை. அடிப்படையில் அது சிங்களவர்களுக்கு எதிரானதும் அல்ல, தமிழர்களுக்கு ஆதரவானதும் அல்ல. மாறாக விடயத்தை உலகளாவிய மனித உரிமை கண்ணோட்டத்தோடு நோக்குகின்றது. அதன் எல்லைக்குள் விடயங்களை நோக்குகின்றது. உறுப்பு நாடுகள் இறுதியாக எதனை பெரும்பான்மையாக ஏற்கின்றதோ, அதுவே மனித உரிமைகள் பேரவையின் நிலைப்பாடாகின்றது. இந்த விடயத்தில் இதுதான் நிகழப் போகின்றது என்பது தெரிந்த பின்னர் இதற்காக அதிகம் செலவழிப்பதிலும் விவாதங்கள் செய்வதிலும் பயனில்லை என்பதுதான் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் நிலைப்பாடு.

இதுதான் நிலைமை என்பது கடந்த பதினாறு வருடங்களாக நிரூபிக்கப்பட்ட பின்னர், ஐ.நா மனித உரிமைகள் பேரவையை மட்டும் உற்று நோக்குவதும், அதற்காக வீண் விவாதங்கள் செய்வதும், யார் சரியென்று சண்டையிடுவதும் வீணானது என்பதையே தமிழர் தரப்புக்கள் புரிந்து கொள்ள முயற்சிக்க வேண்டும்.

# நயினாதீவுக்கு மருத்துவப் படகு 2027ஆம் ஆண்டு வழங்கப்படும்!

### ஆளுநரிடம் உலக வங்கி பிரதிநிதிகள்



யாழ்ப்பாணம், ஒக். 11

ஆரம்ப சுகாதார பராமரிப்பு சேவைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் அனலைதீவுக்கான மருத்துவப் படகு அடுத்த ஆண்டும், நயினாதீவுக்கான மருத்துவப் படகு 2027ஆம் ஆண்டும் வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

உலக வங்கியின் பிரதிநிதிகள், மத்திய சுகாதார அமைச்சின் கீழ் செயற்படும் ஆரம்ப சுகாதார பராமரிப்பு சேவைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் பிரதிநிதிகள், யாழ். மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆகியோர் ஆளுநரை நேற்று முன்தினம் வியாழக்கிழமை ஆளுநர் செயலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினர்.

உலக வங்கியின் நிதி உதவியுடன் ஆரம்ப சுகாதார பராமரிப்பு சேவைகள் மேம்பாட்டுத் திட்டம் 2024 - 2028 ஆம் ஆண்டு வரையில் இலங்கையின் 9 மாகாணங்களிலும் செயற்படுத்தப்படவுள்ளது.

இதற்கு அமைவாக வடக்கு மாகாணத்துக்கு 2026ஆம் ஆண்டு 500 மில்லியன் ரூபாவும், 2027 மற்றும் 2028ஆம் ஆண்டுகளுக்கு தலா 750 மில்லியன் ரூபாவும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிதி ஒதுக்கீட்டின் கீழ் வடக்கு மாகாணத்திலுள்ள ஆரம்ப சுகாதார மருத்துவ நிலையங்கள் மேம்படுத்தப்படவுள்ளன. ஆரம்ப சுகாதார மருத்துவ நிலையங்கள் உருவாக்கப்படும்போது காணப்பட்ட தேவைப்பாடுகளுக்கும் தற்போதைய தேவைப்பாடுகளுக்கும் உள்ள மாறுபாடுகளை கருத்தில்கொண்டு அவற்றை தற்காலத்துக்கு ஏற்றவாறு மேம்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த திட்டத்தை முன்னெடுப்பதற்கான வடக்கு மாகாண சபையின் ஒத்துழைப்பை உலக வங்கிப் பிரதிநிதிகளும், திட்டத்தின் பிரதிநிதிகளும் கோரினர். அத்துடன் இந்தத் திட்டம் தொடர்பில் வடக்கு மாகாணத்துக்கே முதலாவதாக பயணம் மேற்கொண்டுள்ளதாகவும் ஆளுநருக்கு தெரியப்படுத்தினர்.

இந்த திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான ஒத்துழைப்பு வழங்கப்படும் என ஆளுநர் உறுதியளித்தார். (அ)

# முல்லைத்தீவு - கொழும்பு இடையே சொகுசு பஸ் சேவை இந்த மாதம்!

கொழும்பு, ஒக். 11

முல்லைத்தீவு - கொழும்புக்கான குளிரூட்டப்படச் சொகுசு பஸ் சேவை, இந்த மாதத்துக்குள் விரைவில் ஆரம்பிக்கப்படும் என போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

அமைச்சர் பிமல் ரத்நாயக்கவிடம் பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே, அமைச்சின் அதிகாரிகள் இதனை தெரிவித்துள்ளனர்.

பாராளுமன்றத்தில் நேற்று முன் தினம் நடைபெற்ற போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் ஆலோசனைக்குழுக் கூட்டத்திலேயே இந்த விடயம் கூறப்பட்டுள்ளது.


கூடிய விரைவில் இந்த பஸ் சேவையை ஆரம்பிப்பதற்கு திட்டமிட்டுள்ளதாக இதன்போது அமைச்சின் அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

அத்துடன், எதிர்வரும் 15ஆம் திகதி, அமைச்சு சார்ந்த கூட்டமொன்று நடைபெறவுள்ளதாகவும், அந்தக் கூட்டத்தில் இந்த சொகுசு பஸ் சேவையினை ஆரம்பிப்பது தொடர்பாக ஆராயப்படும் எனவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

அதன்படி, இந்த மாத இறுதிக்குள் முல்லைத்தீவு - கொழும்புக்கான சொகுசு பஸ் சேவை ஆரம்பிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

(அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒக்ரோபர் - 11 சனிக்கிழமை
விசுவாவசு வருடம் - புரட்டாதி 25
நல்ல நேரம் : 07.31 - 09.00
ராகு காலம் : 09.00 - 10.30
திதி : பஞ்சமி




**மேடம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் கடந்த காலத்தில் கிடைத்த நல்ல வாய்ப்புகளையெல்லாம் சரியாக பயன்படுத்தாமல் விட்டுவிட்டோமே என்றெல்லாம் வருந்துவீர்கள். பேச்சில் இங்கிதம் தேவைப்படும்.

**இடபம்**
கணவன்-மனைவிக்குள் அனுசரித்துப் போவது நல்லது. வாகனத்தில் கவனம் தேவை. வியாபாரத்தில் வாடிக்கையாளர்களிடம் கனிவாகப் பழகுங்கள். உத்தியோகத்தில் விவாதம் வேண்டாம்.

**மிதுனம்**
உங்களுடைய ஆலோசனைகள் எல்லோரும் ஏற்கும் படி இருக்கும். புதுவேலை கிடைக்கும் பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள்.

**கடகம்**
சொன்ன சொல்லைக் காப்பாற்றத் துடிப்புடன் செயல்படுவீர்கள். வியாபாரத்தில் பழைய வேலையாட்களை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் உங்களின் நிர்வாகத் திறமை வெளிப்படும்.

**சிம்மம்**
உங்கள் பிடிவாதப் போக்கை கொஞ்சம் மாற்றிக் கொள்வீர்கள். உங்களால் பயனடைந்தவர்கள் இப்போது உங்களுக்கு உதவி செய்வார்கள். வியாபாரம் சூடு பிடிக்கும். தேவைகள் பூர்த்தியாகும்.

**கன்னி**
சந்திராஷ்டமம் இருப்பதால் தன்னம்பிக்கை குறையும். செலவினங்கள் அதிகரிக்கும். வியாபாரத்தில் இழப்புகள் ஏற்படும். அதிகாரிகள் குறைக் கூறுவார்கள். பொறுமைத் தேவைப்படும் நாள்.

**துலாம்**
பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக் கொள்வார்கள். புது நட்பால் உற்சாகமடைவீர்கள். வியாபாரத்தில் புது ஒப்பந்தங்களால் லாபம் பெருகும். எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும்.

**விருச்சிகம்**
எதிர்பாராத பணவரவு உண்டு. உறவினர்கள் நண்பர்கள் உங்களை கலந்தாலோசித்து சில முடிவுகள் எடுப்பார்கள். பழைய சிக்கலில் ஒன்று தீரும். உழைப்பிற்கு பாராட்டு கிடைக்கும்.

**தனுசு**
குடும்பத்தில் உங்களின் நேரத்தை செலவழிப்பீர்கள். அக்கம்-பக்கம் இருப்பவர்களின் அன்புத் தொல்லை குறையும். வியாபாரத்தில் புது சலுகைகளை அறிவிப்பீர்கள். மதித்துப் பேசுவார்கள்.

**மகரம்**
தடைகளை கண்டு தளரமாட்டீர்கள். வெளியூர் பயணங்களால் ஆதாயம் உண்டு. வாகன வசதிப் பெருகும். வியாபாரத்தில் பற்று வரவு கணிசமாக உயரும். மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும்.

**கும்பம்**
குடும்பத்தாரின் ஆதரவு பெருகும். விருந்தினர் வருகை அதிகரிக்கும். நீண்டநாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்கள் தீட்டுவீர்கள். நினைத்ததை முடிப்பீர்.

**மீனம்**
கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். எதிர்பாராத இடத்திலிருந்து உதவிகள் கிடைக்கும். வியாபாரத்தில் ஏற்பட்ட இழப்புகளை சரி செய்வீர்கள். பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

# திரிவைத்தகுளம் காணி ஆக்கிரமிப்பு குறித்து வெளிப்படுத்தியமைக்காக கொலை மிரட்டல்

## த.தே.ம. முன்னணி அமைப்பாளர் பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தில் முறைப்பாடு

வவுனியா, ஒக். 11

திரிவைத்தகுளம் காணி ஆக்கிரமிப்பு தொடர்பில் வெளிப்படுத்தியமைக்காக மொட்டுக் கட்சியின் அமைப்பாளரால் கொலை மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளதாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் வவுனியா மாவட்ட அமைப்பாளர் எஸ். தவபாலன், வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

வவுனியா, கண்டி வீதியில் அமைந்துள்ள சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் முறைப்பாடு செய்த பின்னர் ஊடகங்களுக்கு அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

வெடிவைத்தகல் கிராம உத்தியோகத்தர் பிரிவில் திரிவைத்தகுளம் என்னும் கிராமம் போகஸ்வேவ குடியேற்றவாசிகளால் ஆக்கிரமிக்கப் பட்டிருக்கின்றது. இந்த விடயங்களை நாங்கள் கடந்த ஜூலை மாதம் கள விஜயம் செய்து ஊடகங்கள் வாயிலாக வெளிக்கொண்டு வந்திருந்தோம். காணி உரிமையாளர்கள் ஒலுமடுவில் உள்ளனர். அவர்கள் காணியை வெளியாக்கிய போது அவர்கள் மீது வனவள திணைக்களம் வழக்குத் தாக்கல் செய்து மூன்று வருடங்கள் வழக்கு இடம்பெற்று தள்ளுபடி செய்யப்பட்டிருந்தது.

இந்த நிலையில் தான் போகஸ்வேவ குடியேற்றவாசிகளால் குறிப்பாக மகிந்தவின் மொட்டுக் கட்சியின் அமைப்பாளராக இருக்கின்ற பிமல் தர்மராஜா குழுவினரால் டோசர் மூலம் காடுகள் அழிக்கப்பட்டு அந்த இடத்தில் விவசாயம் செய்யப்பட்டுள்ளது. இந்த விடயங்களை ஊடகங்கள் மூலம் நாம் வெளியில் கொண்டு வந்திருந்தோம்.

கடந்த மாதம் 30 ஆம் திகதி அந்த இடங்களைப் பார்வையிட பாராளுமன்ற உறுப்பினர் ப. சத்தியலிங்கம் மற்றும் வவுனியா வடக்கு பிரதேச சபை தவிசாளர் உள்ளிட்ட குழுவினர் சென்றிருந்தனர். அந்த இடத்துக்கு வருகை தந்த காணியை ஆக்கிரமித்துள்ள பிமல் தர்மராஜா போன்ற குழுவினர் அச்சுறுத்தும் வகையில் நடந்து கொண்டதுடன், எனது பெயரினையும் பிரதேச சபை உறுப்பினர் தமிழ்ச் செல்வனின் பெயரையும், வன்னி பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனின் பெயரையும் குறிப்பிட்டு அவர்கள் இங்கு இருக்கிறார்களா? அவர்களை வெட்டுவதற்காக, அவர்களை கொலை செய்யதான் வந்தோம் என்று பாராளுமன்ற உறுப்பினர் ப. சத்தியலிங்கத்துக்கு முன்னால் தெரிவித்திருந்தார்கள். அச்சுறுத்துகின்ற மற்றும் தெரிவித்த கருத்துக்கள் எல்லாம் காணொலிகளாக உள்ளன.

அந்தப்பகுதி போகஸ்வேவ பொலிஸ் நிலையத்துக்கு உட்பட்டதாக இருந்தாலும் அந்த அச்சுறுத்தலுக்கு எதிராக வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்துக்கு வருகை தந்து முறைப்பாட்டை வழங்கியுள்ளோம்.

எமது நிலங்களை அரச திணைக்களங்களுடன் இணைந்து ஆக்கிரமித்து 210 ஏக்கர் நிலத்தில் விவசாயம் செய்துள்ளனர். காணி உரிமையாளர்கள் போவதற்கு தடை போடும் திணைக்களங்கள், குடியேற்ற சிங்களவர்கள் துப்புரவு செய்து அபகரிக்கும் போது பேசாமல் உள்ளனர். இனிவரும் காலங்களில் எவ்வாறான அச்சுறுத்தல் வந்தாலும் திரிவைத்தகுளம் தமிழர் காணிகளை மீட்க தொடர்ந்து போராடுவோம் எனத் தெரிவித்தார். (எ-10)

# பிரசவத்தின் போது இளம் தாய் மரணம்

யாழ்ப்பாணம், ஒக். 11

நெடுந்தீவைச் சேர்ந்த இளம் தாய் ஒருவர் பிரசவத்தின் போது திடீரென உயிரிழந்தார்.

கில்மன் நோபட் தர்சிகா மேரி (வயது -25) என்ற இளம் தாய் நேற்று முன்தினம் யாழ். போதனா மருத்துவமனையில் பிரசவத்தின் போது உயிரிழந்தார்.

உயர் குருதியமுக்கம் மற்றும் வலிப்பு காரணமாக இவர் உயிரிழந்ததாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

இவர் பிரசவித்த பெண் குழந்தை மருத்துவமனையில் ஆரோக்கியமாக காணப்படுகிறது.

உயிரிழந்த பெண்ணின் சடலம் மருத்துவ பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படவுள்ளது. (எ-03)

# இனப்படுகொலையை எடுத்தியம்பும் ஆதாரங்களை பாதுகாக்க வேண்டும்

## தவிசாளர் நிரோஷ் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 11

தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட பாரதூரமான இனப்படுகொலைக்கான சாட்சியங்களை வரலாற்றாக்கும் வகையில் அமையப்பெற்ற நினைவு இடங்களை நாம் பாதுகாப்பது அவசியம். அவற்றை பாதுகாப்பதற்கு சகல தரப்பினரும் ஒத்துழைக்க வேண்டும் என்று வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் கோரிக்கை விடுத்துள்ளார்.

செம்மணியில் அமையப்பெற்ற அணையா விளக்கு நினைவுத் தூபி உடைக்கப்பட்ட நிலையில் அதனை மீளமைக்கும் முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கிய பின்னர் ஊடகங்களுக்கு இவ்வாறு குறிப்பிட்டார்.

தமிழ் மக்களின் மீது வடக்கு - கிழக்கில் அரசினால் கட்டவீழ்த்து விடப்பட்ட அரச பயங்கரவாதத்தின் சாட்சியங்கள் அபிவிருத்தி என்ற போர்வையில் பல இடங்களில் திட்டமிட்டு மாற்றியமைக்கப்பட்டு விட்டன. மேலும், சில இடங்கள் தனிநபர்களாலும் அழிக்கப்பட்டு வருகின்றன. இப்போது, தமிழ் மக்களுக்கு அரச பயங்கரவாதத்தால் எதுவுமே நடக்கவில்லை என சொல்வதற்கான உத்திகளே நடைபெறுகின்றன. இவற்றில் தமிழ் மக்கள் மிகுந்த அவதானமாக இருக்க வேண்டும். எமக்கு எதிரான அடக்குமுறைகளை ஆவணப்படுத்துவதிலும் பாதுகாப்பதிலும் நாம் அவதானமாக இருக்க வேண்டும்- என்றார். (எ-03)

# பற்றைக்காடாக காட்சியளிக்கும் விளாவெளி இந்து மயானம்

## விரைந்து துப்புரவு செய்யுமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 11

வலிகாமம் தென்மேற்கு - மானிப்பாய் பிரதேச சபை ஆளுகைக்குட்பட்ட விளாவெளி இந்து மயானம் உரிய பராமரிப்பின்றி பற்றைக்காடுகள் நிறைந்து காணப்படுகிறது என்று மானிப்பாய் பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் அ.ஜோன் ஜிப்பிரிக்கோ தெரிவித்தார்.

விளாவெளி இந்து மயான உரிமை தொடர்பில் வலிகாமம் மேற்கு, வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபைகளுக்கிடையே நீண்ட இழுபறி இருந்த நிலையில் 2018 காலப்பகுதியில் இம்மயானத்தை மானிப்பாய் பிரதேச சபை பொறுப்பேற்க வேண்டுமென தீர்மானம் கொண்டு வந்து முதற்கட்டமாக மயானம் துப்புரவு செய்யப்பட்டது.

அதன் எரிகொட்டகை, இளைப்பாறு மண்டப புனரமைப்பு, மயான எல்லைப்படுத்தல் போன்ற அபிவிருத்திப் பணிகள் செயல்படுத்தப்பட்டன.

விளாவெளி மயானத்தை மானிப்பாய் பிரதேச சபை ஆளுகைக்குள் எடுப்பதற்கும் அபிவிருத்திப் பணிகள் நடப்பதற்கு காரணமாக இருந்தவன் என்கிற அடிப்படையில் தற்போது மயானம் உரிய பராமரிப்புகள் இன்றி பற்றைக்காடாக மாறியிருப்பது கண்டு மிகுந்த மனவேதனையடைகிறேன்.

தற்போதைய பண்டத்தரிப்பு வட்டார உறுப்பினரோ, மானிப்பாய் பிரதேச சபை தவிசாளரோ இது தொடர்பில் உடனடியாக நடவடிக்கை எடுக்காதது வேதனையானது.- என்றார். (எ-05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது வேலைத்திட்டத்தில் ஐ.தே.கவுடன் இணைவோம்

## சஜித் பிரேமதாஸ அறிவிப்பு

கொழும்பு, ஒக். 11

**ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமை - வழிகாட்டுதலின் கீழ் ஐக்கிய தேசியக் கட்சியுடன் அரசியல் ரீதியாக ஒரு பொதுவான வேலைத் திட்டத்தில் ஈடுபட முடிவு செய்யப் பட்டுள்ளதாக அந்தக் கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.**



செயல்குழு கூட்டத்திலும் அதற்கு முன்னர் நடைபெற்ற இரண்டு நிர்வாகக் குழு கூட்டங்களிலும் இது தொடர்பாக ஐக்கிய மக்கள் சக்தி ஏகமானதாக முடிவெடுத்ததாகவும் அவர் கூறினார்.

நாட்டையும் மக்களையும் பாதிக்கும் பிரச்னைகள் குறித்தும் பிரச்னைகளுக்கு தீர்வுகளை வழங்கவதற்கு நடைமுறை - மக்கள் சார்ந்த கொள்கையின் அடிப்படையில் இரு கட்சிகளின் அடையாளத்தையும் பேணுவதற்கும் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்- என்றும் அவர் மேலும் கூறினார். (ஐ)

# தனது தனிப்பட்ட வங்கி கணக்கை மோசடி கும்பலுக்கு விற்றவர் கைது

கொழும்பு, ஒக். 11

ஒழுங்கமைக்கப்பட்ட இணைய மோசடி கும்பலுக்கு தனது வங்கி கணக்கை பணத்துக்காக விற்பனை செய்த தனியார் நிறுவனத்தின் கணக்கு உதவியாளர் ஒருவரை குற்றப் புலனாய்வுத் திணைக்களம் கைது செய்துள்ளது.

கொழும்பு - தெமட்டகொடையை சேர்ந்த 32 வயதான நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

32 வயதான சந்தேகநபர், தனது தனிப்பட்ட வங்கி கணக்கை 20 நாட்கள் பயன்படுத்துவதற்காக மோசடி கும்பலிடமிருந்து 40 ஆயிரம் ரூபாய்க்கும் மேல் பெற்றுள்ளார்.

இந்த 20 நாட்களுக்குள் அவரின் வங்கி கணக்கு மூலமாக 20 இலட்சம் ரூபாய்க்கு மேல் பணப் பரிவர்த்தனை இடம் பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பணத்துக்கு வங்கி கணக்கை விற்பது நிதி குற்றச் சங்கிலியின் ஒரு பகுதியாக அடையாளம் காணப்பட்டுள்ளது. வட்ஸ் அப், ரெலிகிராம் ஊடாக இணைய வணிகம் என்று கூறி ஒரு நபரிடமிருந்து 5 இலட்சத்து 42 ஆயிரத்து 877 ரூபாய் மோசடி செய்யப்பட்டது. இது தொடர்பான விசாரணையின் ஒரு பகுதியாகவே தனிப்பட்ட வங்கி கணக்கை பணத்துக்காக விற்பனை செய்த சம்பவம் கண்டறியப்பட்டுள்ளது.

இதனிடையே, சந்தேகநபரின் வங்கி கணக்கிலிருந்து மோசடி செய்யப்பட்ட பணம் நுணுக்கமாக 6 வங்கி கணக்குகளுக்கு இடையே பரிமாற்றம் செய்யப்பட்டமையும் கண்டறியப்பட்டுள்ளது.

இதனிடையே, இந்த மோசடி குறித்து ஏற்கனவே சந்தேகநபர்கள் இருவர் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவின் படி விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சூத்திரதாரி அடையாளம்!

## நிசாம் காரியப்பர் எம். பி.

கொழும்பு, ஒக். 11

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத தாக்குதலின் பிரதான சூத்திரதாரி அடையாளம் காணப்பட்டுள்ளார் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ரவி செனவிரத்ன கூறினாரென பாராளுமன்ற உறுப்பினர் நிசாம் காரியப்பர் தெரிவித்துள்ளார்.



பிரதமர் ஹரிணி அமரசூரியவின் தலைமையில் பாராளுமன்றத்தில் நடைபெற்ற உயர்நிலை நியமன குழுவில் தான் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்தபோது இவ்விடயத்தை ரவி செனவிரத்ன தெரிவித்தார் என்று அவர் கூறியுள்ளார்.

இது தொடர்பில் நிசாம் காரியப்பர் தனது எக்ஸ் தளத்தில், "உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் முக்கிய சூழ்ச்சியாளரை நாம் அடையாளம் கண்டுள்ளோம்" என பொது பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ரவி செனவிரத்ன தெரிவித்தார்.

இதேவேளை, உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் போது கிடைத்த சாட்சியங்களின் அடிப்படையில் பல சந்தேகநபர்கள் ஏற்கனவே கைது செய்யப்பட்டுள்ளனர். தாக்குதல் நடத்தப்படுவதற்கு முன்னர், தாக்குதலை நடத்த சதித் திட்டம் தீட்டியமை தொடர்பில் தற்போது சந்தேகநபர்கள் கைது செய்யப்படுகின்றனர். அத்துடன், வவுணதீவு தாக்குதல் உள்ளிட்ட பல சம்பவங்கள் தொடர்பில் ரவி செனவிரத்ன இதன்போது தெளிவுபடுத்தினார்", என்றும் நிசாம் காரியப்பர் குறிப்பிட்டுள்ளார்.

# ஆயுதங்களுடன் ஒருவர் கைது!

கொழும்பு, ஒக். 11

துப்பாக்கிகள் மற்றும் தோட்டாக்களுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

குருநாகல் - பன்னல பொலிஸ் பிரிவின் மாகந்துர பகுதியில் வைத்தே சந்தேகநபர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார்.

விசேட அதிரடிப் படையினரின் நடவடிக்கையிலேயே இவர் கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபரிடமிருந்து வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட 2 துப்பாக்கிகள், 7 பிஸ்டல் ரக தோட்டாக்கள், 12- போர் தோட்டாக்கள் 09 மற்றும் வாள் ஒன்றும் கைப்பற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# ஆசிய - பசுபிக் ஊடக பிரதிநிதிகள் நவம்பரில் கொழும்பில் கூடுகின்றனர்

கொழும்பு, ஒக். 11

ஆசிய, பசுபிக் ஊடகங்கள் எதிர்வரும் நவம்பர் 25ஆம் திகதி முதல் 27ஆம் திகதி வரை கொழும்பில் ஒன்றுகூடவுள்ளன. உள்நாட்டு, வெளிநாட்டு ஊடக நிறுவனங்களைச் சேர்ந்த 200 பிரதிநிதிகள் இவ்வாறு ஒன்றுகூடவுள்ளனர் என்று இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஜிஹான் டி சில்வா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஆசிய, பசுபிக் ஒலிபரப்பாளர்கள் சங்கத்தின் 9ஆவது மாநாடு எதிர்வரும் நவம்பர் 25 முதல் 27 ஆம் திகதி வரை கல்கிசை பீச் ஹோட்டலில் நடைபெறவுள்ளது. இதில், 35 நாடுகளை சேர்ந்த பிரதிநிதிகள் பங்கேற்கவுள்ளனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

# பாதாள குழு தலைவருக்கு நீதிமன்றம் பிடியாணை!

கொழும்பு, ஒக். 11

பாதாள உலகக்குழுவின் தலைவராக அறியப்படும் பிரபல போதைப்பொருள் கடத்தல்காரரான குடு சலிந்து என்று அறியப்பட்ட சலிந்து மல்ஷிக என்பவரை கைது செய்து நீதிமன்றத்தில் முற்படுத்துமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் பிடியாணை உத்தரவு பிறப்பித்துள்ளது.

பிணையில் விடுவிக்கப்பட்டிருந்த சந்தேகநபர் சட்டவிரோதமான முறையில் வெளிநாட்டுக்குத் தப்பிச் சென்றமை தொடர்பான வழக்கு விசாரணை நேற்று முன்தினம் நடைபெற்றபோதே நீதிவான் இவ்வாறு உத்தரவிட்டிருந்தார்.

வழக்கு விசாரணையில் அதிகாரிகளால் முன்வைக்கப்பட்ட சாட்சியங்களை பரிசீலனை செய்த நீதிவான் சந்தேகநபரை கைது செய்து நீதிமன்றத்தில் முற்படுத்த உத்தரவிட்டதுடன், பிணையாளர்களுக்கு அறிவித்தல் அனுப்பி வைக்குமாறும் இது தொடர்பில், விசாரணை மேற்கொண்டு விசாரணை அறிக்கையை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறும் நீதிவான் மேலும் தனது உத்தரவில் தெரிவித்தார். (ஐ)

# மலையக அபிவிருத்தி அதிகார சபையை ஒழிப்பதாக தீர்மானம் எடுக்கப்படவில்லை

## அமைச்சர் சந்திரசேகர் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 11

மலையக அபிவிருத்தி அதிகார சபை இல்லாது ஒழிக்கப்படாது. இது தொடர்பில் அரசாங்கம் எந்தத் தீர்மானத்தையும் மேற்கொள்ளவில்லை என்று அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

அந்த அதிகார சபையை விரிவாக்கம் செய்து முன்னெடுத்துச் செல்வதே அரசாங்கத்தின் தீர்மானம். மலையக மக்களையும் அவர்களுக்கான நிறுவனங்களையும் அரசாங்கம் பாதுகாக்கும்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் மனோ கணேசன் எம். பி. எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் சந்திரசேகர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும், மலையக அதிகார சபையை அரசாங்கம் ஒரு போதும் இல்லாதொழிக்காது. அவ்வாறான ஒரு தீர்மானமும் கிடையாது.

பிரதமர் ஹரிணி அமரசூரிய தலைமையிலான குழுவில் மேற்படி அதிகார சபையை மேலும் விரிவுபடுத்துவது தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளதே தவிர, அதனை இல்லாதொழிக்கும் தீர்மானம் எடுக்கப்படவில்லை.

அந்த வகையில் மலையக அபிவிருத்தி அதிகார சபை எந்த வகையிலும் இல்லாதொழிக்கப்படமாட்டாது.

இது தொடர்பில் சபையில் குறுக்கிடு செய்த மனோ எம். பி., அமைச்சர் இவ்வாறு தெரிவித்தாலும் ஜனாதிபதி எனக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் மேற்படி அதிகார சபை தொடர்பில் பிரச்னை காணப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளார். சம்பந்தப்பட்ட அமைச்சர் உள்ளிட்ட அனைவரும் இது தொடர்பில் முறையாக பேச்சு நடத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

அவருக்கு மீண்டும் பதிலளித்த அமைச்சர் சந்திரசேகர் மேற்படி அதிகார சபையை இல்லாதொழிக்கப் போவதில்லை என்பது அரசாங்கத்தின் தீர்மானமாகும். அந்த வகையில் அதை விரிவாக்கம் செய்து முன்னெடுத்துச் செல்வதே அரசாங்கத்தின் நோக்கமாகும்.

அதை விடுத்து மனோ கணேசன் எம்பி கூறுவது போன்று, பொது பிரச்னைகள் காணப்பட்டால் அது தொடர்பில் நாம் உரிய கவனம் செலுத்தி பேச முடியும் - என்றார். (ஐ)

# ஐரோப்பிய நாடுகளில் வேலை வாய்ப்பு பெற்று தருவதாக ரூ. 20 கோடி மோசடி!

## முன்னாள் இராணுவ அதிகாரி உட்பட இருவர் கைது

கொழும்பு, ஒக். 11

ஐரோப்பிய நாடுகளில் வேலை பெற்றுத் தருவதாகக் கூறி சுமார் 20 கோடி ரூபாயை மோசடி செய்த ஓய்வுபெற்ற இராணுவ கேணல் உட்பட் சந்தேகநபர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் சிறப்பு புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகளால் இருவரும் கைது செய்யப்பட்டனர்.

கைதான சந்தேக நபர்களில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு துறையில் பல வருட அனுபவமுள்ள மாவனெல்லைச் சேர்ந்த ஒருவரும், கடவத்தையைச் சேர்ந்த ஓய்வுபெற்ற இராணுவ கேணல் ஒருவரும் அடங்குவர்.

மாவனெல்லை, இம்புல் கொடை பகுதிகளில் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் அனுமதி பெற்ற நிறுவனம் ஒன்றின் மூலமே இந்த மோசடி நடைபெற்றுள்ளது.

கைதானவர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை மாணவர்கள் கட்டாயம் தலைக்கவசம் அணிய வேண்டும்

கல்முனை, ஒக். 11

பாடசாலைக்கு செல்லும் மாணவ, மாணவிகள் பாதுகாப்பு கருதி கட்டாயமாக தலைக்கவசம் அணிந்து செல்லுமாறு கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி லசந்த களுவாராய்ச்சி அறிவித்துள்ளார்.

அம்பாறை, கல்முனை வலயக் கல்வி பணிப்பாளருக்கு இவ் விடயம் தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். பாடசாலைக்கு செல்லும் மாணவ, மாணவிகள் தங்களது பாதுகாப்பு கருதியும் மற்றும் வீதிப் போக்குவரத்து சட்டங்களை அறிவுறுத்தல் செய்யுமாறும் வேண்டிக் கொள்வதோடு இவ் சட்ட திட்டங்களை மீறும் பட்சத்தில் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் வலயக் கல்வி அலுவலகத்துக்குட்பட்ட பாடசாலை மாணவ, மாணவிகளை பாடசாலை ஆரம்பத்திலும், முடிவிலும் ஒரு ஒழுங்குபடுத்தல் செய்து வீதிப் போக்குவரத்து காப்பாளர்களை நியமிக்குமாறும் மற்றும் பாடசாலை அதிபர்களுக்கு அறிவுறுத்தல் கொடுக்குமாறும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

எனினும், வலயக் கல்வி அலுவலகத்துக்குட்பட்ட பாடசாலை ஆசிரியர்கள் ஒரு சிலர் பாடசாலை வருகின்ற போது தலைக்கவசம் இன்றி மோட்டார் சைக்கிளில் செல்வது அவதானிக்கப்பட்டுள்ளமையும் சுட்டிக்காட்டத்தக்கது. (எ-01)

# கிழக்கு, மத்திய மாகாணங்களில் இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்

கொழும்பு, ஒக். 11

கிழக்கு, மத்திய, ஊவா, தென் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் பொலநறுவை, முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாணம் மாவட்டங்களிலும் பிற்பகல் 01.00 மணிக்குப் பிறகு மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

மேல் மற்றும் தென் மாகாணங்களில் காலை நேரங்களில் மழை பெய்யக்கூடும்.

சப்ரகமுவ, மத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் சில இடங்களில் காலை நேரங்களில் பனிமூட்டம் நிலவக்கூடும்.

இடியுடன் கூடிய மழையுடன் ஏற்படக்கூடிய மின்னல் தாக்கம் மற்றும் தற்காலிக பலத்த காற்றினால் ஏற்படக்கூடிய ஆபத்துகளைக் குறைக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு வளிமண்டலவியல் திணைக்களம் பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளது. (எ)



# கிழக்கில் சிறந்த முதியோர் சங்கமாக காரைதீவு கண்ணகி சங்கம் தெரிவு

## ஆளுநர் விருது வழங்கி கௌரவித்தார்

மட்டக்களப்பு, ஒக். 11

கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக அம்பாறை மாவட்டத்தில் சிறந்த முதியோர் சங்கமாக காரைதீவு கண்ணகி முதியோர் சங்கம் தெரிவு செய்யப்பட்டு விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

கிழக்கு மாகாண சமூக சேவை திணைக்கள பணிப்பாளர் கிருஷ்ணபிள்ளை இளங்குமுதன் தலைமையில் முதியோர் தின கௌரவிப்பு விழா நேற்று முன்தினம் மட்டக்களப்பு மாநகர சபை மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை மாவட்ட சிறந்த முதியோர் சங்கங்கள், முதியோர் தலைவர்கள் தெரிவு செய்யப்பட்டு பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

கிழக்கு மாகாண ஆளுநர் ஜயந்தலால் ரத்னசேகர, காரைதீவு கண்ணகி முதியோர் சங்கத் தலைவர் த. சிவானந்தராஜா, பொருளாளர் த. வசந்தமலர் ஆகியோரிடம் விருது வழங்கி கௌரவித்தார். (எ-08)

# கறுப்புப்பட்டி அணிந்து கவனவீர்ப்பு போராட்டம்




நுவரெலியா, ஒக். 11

உலக அஞ்சல் தினத்தில் தபால் மா அதிபர் தெரிவித்த கருத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து கறுப்புப்பட்டி அணிந்து நுவரெலியா பிரதான தபால் நிலைய உத்தியோகத்தர்கள் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த ஆர்ப்பாட்டம் நுவரெலியா நகரின் மையப் பகுதியிலுள்ள பிரதான தபால் நிலையத்துக்கு அருகில் நடைபெற்றது.

உலக அஞ்சல் தினத்தை கறுப்பு தினமாக நினைவு கூரும் முகமாகவும் தபால் பணியாளர்கள் முறைகேடாக மேலதிக கொடுப்பனவை பெற்றுள்ளதாக தபால் மா அதிபர் வெளியிட்ட கருத்துக்கு எதிர்ப்பு தெரிவித்தும் நுவரெலியா பிரதான தபால் நிலையத்தில் தொழில் புரியும் ஊழியர்கள் தலையில் கறுப்புப் பட்டி அணிந்து குறித்த போராட்டத்தை முன்னெடுத்தனர்.

குறித்த போராட்டம் மதிய உணவு இடைவேளையின் போது தபால் நிலையத்தை முழுமையாக மூடி அதற்கு முன்பாக இப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (எ)

# கல்முனை ஆதார மருத்துவமனைக்கு ரூ. 3 கோடி பெறுமதியான உபகரணங்கள்

கல்முனை, ஒக். 11

இலங்கை சுகாதார திணைக்கள நிதி ஒதுக்கீட்டில் 3 கோடி ரூபாய் பெறுமதியான 2ஆம் கட்ட மருத்துவ உபகரணங்கள் கல்முனை ஆதார மருத்துவமனைக்கு கொண்டுவரப்பட்டன.

கல்முனை ஆதார மருத்துவமனையின் பணிப்பாளர் சுகுணன் குணசிங்கம் மேற்கொண்ட பெரும் முயற்சி காரணமாக இவ் உபகரணங்கள் நேற்று முன்தினம் மருத்துவமனைக்கு கொண்டுவரப்பட்டன.

அண்மையில் பணிப்பாளர் குணசிங்கம் சுகுணன் மருத்துவமனையின் விடுதி, பிரிவுகளின் பொறுப்பாளர்களுடன் கலந்துரையாடி தேவைகள் இனங்காணப்பட்டதற்கு அமைவாக உபகரணங்களை விரைவாக பெற்றுத்தர நடவடிக்கை எடுப்பதாக கூறியிருந்தார்.

அந்த வகையில் மிக முக்கிய தேவையான சில உபகரணங்கள் ஏற்கனவே பெற்று கையளிக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று முன்தினம் இவை கொண்டுவரப்பட்டன. (எ-08)





வரலாற்று பிரசித்தி பெற்ற கல்முனை பாண்டிருப்பு சிறீ திரௌபதை அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் வனவாச நிகழ்வு பக்தி பூர்வமாக நடைபெற்றது. (படங்கள் வி.ரி. சகாதேவராஜா)

# மட்டக்களப்பு படுவான் நிலப்பரப்பை அச்சுறுத்தும் காட்டு யானை கூட்டம்

மட்டக்களப்பு, ஒக். 11

மட்டக்களப்பு மாவட்டம் படுவான்கரைப் பிரதேசத்துக்குட்பட்ட போரதீவு பற்று பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பாலையடிவட்டை கிராமத்துக்குள் அதிகாலை 03.00 மணியளவில் புகுந்த காட்டு யானைகள் அங்குள்ள 03 வீடுகளையும் தென்னை, வாழை உள்ளிட்ட பயிரினங்களையும் துவம்சம் செய்துவிட்டு சென்றுள்ளதாக அப்பகுதி மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

ஆழ்ந்த உறக்கத்திலிருந்த வேளையில் காட்டு யானைகள் இவ்வாறு திடீரென கிராமத்துக்குள் நுழைந்ததாகவும் மக்கள் மயிரிழையில் உயிர் தப்பியதாகவும் கூறினர்.

யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதன் பின்னர் இவ்வாறு மெல்ல மெல்ல கிராமங்களுக்குள் உட்புகுந்த காட்டு யானைகள் தற்போது மக்கள் குடியிருப்புக்குள்ளேயே நிலைகொண்டுள்ளதனால் அப்பகுதி மக்கள் தமது அன்றாட செயல்பாடுகளைக் கூட சுதந்திரமாக மேற்கொள்ள முடியாதுள்ளதாகவும் தெரிவித்தனர். (எ)

# ஐஸ் மற்றும் ஹெரோயின் விநியோகித்த நபர் கைது

கல்முனை, ஒக். 11

நீண்டகாலமாக ஐஸ் மற்றும் ஹெரோயின் போதைப்பொருட்களை விநியோகித்த சந்தேக நபரை அம்பாறை தலைமையக பொலிஸ் ஊழல் தடுப்புப் பிரிவினர் கைது செய்தனர்.

கடந்த ஒரு மாத காலமாக மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கைகளின் மூலம் இந்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

ஆரம்ப விசாரணைகளில், கைதான சந்தேக நபர் டுபாயில் இருந்து இயங்கும் போதைப்பொருள் கடத்தல் குழுவின் தலைமையின் கீழ் செயல்பட்டு வந்தது தெரியவந்துள்ளது.

கிழக்கு மாகாணத்துக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் வருண ஜெயசுந்தரவின் உத்தரவின் பேரில், அம்பாறை மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் சுஜித் வேதமுல்லவின் அறிவுறுத்தலின்படி, அம்பாறை பிரிவுக்கு பொறுப்பான பதில் பொலிஸ் அத்தியட்சகர் பிரதீப் குமாரவின் வழிகாட்டுதலில், மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தையிட்டி..

போதே அமைச்சர் இதனை குறிப்பிட்டார்.

மத விவகாரங்கள் அமைச்சு மற்றும் துறை சார் அதிகாரிகளுடன் இணைந்து தையிட்டி விஹாரை பிரச்னை தொடர்பான அறிக்கையைத் தயார் செய்துள்ளதாக வும் அமைச்சர் கூறியுள்ளார்.

அதற்கமைய, மிக விரைவில் தையிட்டி விகாரை பிரச்னைக்கான தீர்வு வழங்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, யாழ்ப்பாணம் - பலாலி சர்வதேச வானூர்தி நிலையத்தின் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்காக நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் பிமல் ரத்நாயக்க பாராளுமன்றத்தில் அறிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் உரிய நடைமுறைகளைப் பின்பற்றி ஒதுக்கீடுகள் பகிர்ந்தளிக்கப்படும் எனவும் அவர் கூறியுள்ளார்.

இந்த நிலையில் வானூர்தி நிலையத்தின் ஓடுதளத்தை நிர்மாணிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளதாக அமைச்சர் பிமல் ரத்நாயக்க சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

## ஜெனிவா....

அதுபோல், அத்தகைய செயல்பாடுகளில் ஈடுபடுவதற்கு எவரையும் அனுமதிக்கவும் மாட்டோம்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை அரசாங்கத்தின் நிலைப்பாட்டை வெளிவிவகார அமைச்சர் தெளிவுபடுத்திவிட்டார். ஜெனிவா தீர்மானத்துடன் நாங்கள் உடன்படவில்லை என்று திட்டவட்டமாக அறிவிக்கப்பட்டுள்ளது. அந்த நிலைப்பாட்டில் நாங்கள் எப்போதும் மாற்றங்களைச் செய்யமாட்டோம்.

கடந்த காலங்களில் நாட்டின் நீதித்துறையின் சுயாதீனம் தொடர்பில் உள்நாட்டிலும் சர்வதேசத்திலும் சந்தேகங்கள் இருந்தன. ஆனால், தற்போது நீதித்துறையின் சுயாதீனம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

தேசிய மக்கள் சக்தியின் ஆட்சியில், நீதித்துறையில் சுயாதீனம் எவ்வளவு தூரம் மேம்பட்டுள்ளது என்பதை நாங்கள் நிரூபித்துக் காட்டியுள்ளோம். ஆதலால், இலங்கைக்கு எதிரான குற்றச்சாட்டுகளை விசாரிப்பதற்கு சர்வதேசம் தேவை யில்லை என்பதே எமது நிலைப்பாடு." - என்றும் அவர் கூறியுள்ளார். (ஐ)

## பேச்சுக்களின்...

எதிர்க்கட்சியினர் நாங்கள் செய்த நல்ல விடயங்களை பாராட்டியதும் இல்லை.

இணைந்து செயற்பட்டதுமில்லை.

கள்வர்களை கைது செய்யும்போதே இணைந்து செயற்பட்டனர்.

நான்கு ஐந்து மாதங்கள் பேச்சுவார்த்தைகளின் பின்னரே அமைச்சரவை மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

எதிர்வரும் காலங்களில் நாட்டின் பொருளாதாரம், தேசிய ஒருமைப்பாடு, போதை பொருளை கட்டுப்படுத்தல், டிஜிற்றல் மயப்படுத்தல், அரச சேவையை துரிப்படுத்தல் போன்ற முன்னிலை காரணங்களை கருத்தில் கொண்டு பல பேச்சுவார்த்தைகளின் பின்னர் புதிய திறமையானவர்களுக்கு அமைச்சு மற்றும் பிரதியமைச்சர் வழங்குவதென்ற பொது இணக்கப்பாட்டின் பிரதிபலனே இந்த மாற்றம்.

இந்த அமைச்சு பாரிய பொறுப்பாகும். துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் அமைச்சு பெரும் சவாலானதாகும். இதில் மக்கள் தொடர்புகள் குறை வானதாகும்.

ஆனால் நகர அபிவிருத்தி மக்களுடன் தொடர்புபட்டதாகும், அதனால் வேலைத்திட்டங்கள் அதிகமானதாகும்.

இந்த அமைச்சில் இதற்கு முன்னர் இருந்தவர்கள் அமைத்துள்ள திட்டங்களை முன்னெடுத்து செல்வதே எனது வேலைத்திட்டமாக இருக்கும்-என்றார். (அ)

## அமைச்சரவையில்...

ரணசிங்க - வீட்டுவசதி கட்டுமானம் மற்றும் நீர் வழங்கல் அமைச்சராக சத்தி யப்பிரமாணம் செய்து கொண்டார்.

கலாநிதி அனில் ஜயந்த பெர்னாண்டோ - நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சராகவும், டி.பி. சரத் - வீட்டுவசதி கட்டுமானம் மற்றும் நீர் வழங்கல் பிரதி அமைச்சராகவும், எம். எம். மொஹமட் முனீர் - மத மற்றும் கலாச்சாரம், எரங்க குணசேகர - நகர அபிவிருத்தி, வைத்தியர் முதித ஹங்சக விஜயமுனி - சுகாதாரம், அரவிந்த செனரத் விதாரண - காணி மற்றும் நீர்ப்பாசனம், எச்.எம். தினிது சமன் குமார - இளைஞர் விவகார பிரதி அமைச்சர்களாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டனர். (அ)

## ஊழல்..

குழுவுக்கான ஆட்சேர்ப்பு துரிதப்படுத்தப்பட வேண்டும். ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின்படி அதன் சுதந்திரம் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் நாணய நிதியம் வலியுறுத்தியுள்ளது. (ஐ)

## அமைதிக்கான...

"2025ஆம் ஆண்டுக்கான அமைதிக்கான நோபல் பரிசு, வெனிசுலா மக்களுக்கு ஜனநாயக உரிமைகளைப் பெற்றுத் தருவதற்காக அயராது போராடி, நாட்டில் சர்வாதிகாரத்தில் இருந்து ஜனநாயகம் மலர குரல் கொடுத்து வரும் மரியா கொரினா மச்சாடோவுக்கு அறிவிக்கப்படுகிறது." என ஸ்வீடிஷ் அக்கடமி தெரிவித்துள்ளது. விருது அறிவிப்பை தி நோர்வேஜியன் நோபல் கமிட்டியின் தலைவர் ஜோர்கன் வாட்னே ப்ரிட்நெஸ் அறிவித்தார்.

மரியா கொரினா மச்சாடோ, கடந்த 14 மாதங்களாக தலைமறைவாக வாழ்ந்து வருகிறார். அவரது உயிருக்கு ஆபத்து இருந்தாலும் கூட அவர் வெனிசுலாவை விட்டு வெளியேறவில்லை. இது அந்நாட்டு மக்கள் மத்தியில் அவருக்குப் பெரும் அபிமானத்தைப் பெற்றுத் தந்தது. மரியா, வெனிசுலாவின் ராணுவ ஆட்சி அகற்றப்பட்ட வேண்டும் என்பதற்காக எதிர்க்கட்சிகளை ஒன்றுதிரட்டினார். அங்கே ஜனநாயகம் அமைதி வழியில் மலர அவர் வித்திட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த ஆண்டு அமைதிக்கான நோபல் பரிசு ஜப்பான் நாட்டின் நிஹோான் ஹிதான்கியோ என்ற அமைப்புக்கு வழங்கப்பட்டது. அந்த அமைப்பு ஹிரோஷிமா, நாகசாகி நகரங்களில் அண்குண்டு வீச்சில் தப்பியவர்களுக்காக செயல்படும் இயக்கமாகும். (அ)

## இலக்குகளை...

போது, கொள்கலன் சம்பவம் காரணமாக அமைச்சர் பிமல் ரத்நாயக்க நீக்கப்பட்டாரா என எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சானக்கியன் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் வகையில் இந்த கருத்தை வெளியிட்டார்.

அமைச்சர் பிமல் ரத்நாயக்கவிடம் புதிய மற்றும் மேலதிக பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும், அது விரைவில் அறிவிக்கப்படும் என்றும் பிரதி அமைச்சர் அனில் ஜெயந்த பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இதேவேளை பிமல் ரத்நாயக்க வசமிருந்த துறைமுகங்கள் மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சு அவரிடமிருந்து பறிக்கப்பட்டதாக எங்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொள்கலன் அனுமதி ஊழல் இந்த நடவடிக்கைக்கு வழிவகுத்ததா என்று நாங்கள் யோசிக்கிறோம்.

எப்படியிருந்தாலும், இந்த நடவடிக்கைக்கு ஜனாதிபதிக்கு நன்றி தெரிவிக்கிறோம் என்று பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சானக்கியன் தெரிவித்தார். (அ)

# வடக்குக்கும் நெடுஞ்சாலை அமைக்கப்படுதல் அவசியம்!

## கவனம் செலுத்துங்கள் என்கிறார் சாணக்கியன் எம்.பி.

கொழும்பு, ஒக். 11

வடக்கு மாகாணத்தில் காணப்படும் போக்குவரத்து சிக்கலை தீர்ப்பதற்கு வடக்கிற்கும் அதிவேக நெடுஞ்சாலை அமைக்கப்பட வேண்டும். இது தொடர்பில் அரசாங்கம் விரைவில் கவனம் செலுத்த வேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று இடம்பெற்ற அமர்வில் உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

வடக்கு-கிழக்கு மாகாணங்களைப் பொறுத்த வரையில் அந்தப் பிரதேசங்கள் அபிவிருத்தியடைமால் இருப்பதற்கு போக்குவரத்து நெரிசல் முக்கிய காரணமாகும். யாழ்ப்பாணத்திலிருந்து 8 மணித்தியாலம் பயணம் மேற்கொண்டு கொழும்புக்குச் செல்ல வேண்டும்.

2013 ஆம் ஆண்டு 2014 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அதிவேக நெடுஞ்சாலையினுடைய அமைச்சரவை முன்மொழிவு இருந்தது. மொனராகலை பிரதேசத்தின் ஊடாக மட்டக்களப்பிற்கு அதிவேக நெடுஞ் சாலையை அமைப்பதற்கும் தம்புள்ளை ஊடாக வடக்கை நோக்கி அதிவேக நெடுஞ்சாலை அமைக்கவும் முன்மொழியப்பட்டது.

இது தொடர்பாக அரசாங்கம் விரைவில் கவனம் செலுத்த வேண்டும்- என்றார். (அ)

## பெரும்...

முந்தைய நிர்வாகத்தால் கையெழுத்திடப்பட்ட அதே ஒப்பந்தம் எந்த மாற்றமும் இல்லாமல் தொடர்கிறது.

மின்சார கட்டணத்தை 33 வீதத்தால்குறைப்பதாக அளித்த வாக்குறுதிகள், 9 ஆயிரம் ரூபாய் கட்டணத்தை 6 ஆயி ரம் ரூபாயாகவும், 3 ஆயிரம் ரூபாய் கட்டணத்தை 2 ஆயிரம் ரூபாயாகவும் குறைத்தல் தொடர்பான விடயம் இன்னும் நிறைவேற்றப்படவில்லை. இந்த நிலையில், இப்போது மீண்டும் 6.8 வீதம் உயரவுள்ளது.

159 பெரும்பான்மை இருந்தபோதிலும், அரசாங்கம் ஐ. எம். எவ்வின் ஒவ்வொரு தாளத்துக்கும் நடனமாடுகிறது. மக்கள் மாற்றத்துக்காக வாக்களித்தனர் - ஐ. எம். எவ். இயக்கும் அதேபாதையில் இயங்குவதற்காக அல்ல. 2028 முதல் இலங்கை ஆண்டுதோறும் 500 கோடி அமெரிக்க டொலர் கடன் திருப்பிச் செலுத்த வேண்டியிருக்கும் - என்றார். (அ)

## யாழில்...

அளவுக்கு அதிகமாக வீட்டில் வைத்து உட்கொண்டுள்ளார்.

அவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்ப்பிக்கப்பட்டார். இருப்பினும் சிகிச்சை பலனின்றி நேற்று அதிகாலை உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபால சிங்கம் மேற்கொண்டார். சாட்சிகளை மானிப்பாய் பொலிஸார் நெறிப்படுத்தினர். (அ-05)

## சமஷ்டிக்கு...

இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் 13ஆம் திருத்தத்தையும் அரசியலமைப்பையும் குழப்பி ஏக்கிய ராஜ்ய மற்றும் ஒற்றையாட்சி என இரண்டையும் கூறுகிறார். அது 38 வருடமாக தோல்வியடைந்த முறை என சொல்கிறார்.

மாகாண சபை சட்டத்தின் மூலம் தான் தற்போது உள்ள உள்ளூராட்சி சபைகள் முறைமை காணப்படுகின்றது. நடைபெற்று முடிந்த உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் கஜேந்திரகுமாரின் கட்சியும் போட்டியிட்டது. அது ஒற்றையாட்சி இல்லை எனச் சொல்கிறாரா என விளங்கவில்லை.

கஜேந்திரகுமார் முடக்கம் முடக்கம் என சொல்கிறார். ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக்கு கடிதம் எழுதி முடக்கக்கூடாது என கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கூறுகிறார்.

எங்களைப் பொறுத்தவரையில் 87 இற்கு முன்னர் பாராளுமன்ற கட்டமைப்புக்கு பிறகு உள்ளூராட்சிச் சபை முறைமை தான் காணப்பட்டது.

1988 இற்கு பின்னர் 13ஆம் திருத்த சட்ட மூலம் ஒரு கட்டமைப்பாக மாகாண சபை கொண்டுவரப்பட்டது.

பாராளுமன்றுக்கு அடுத்ததாக உப சட்டவாக்க அலுவலகமாக அது காணப்பட்டது.

13ஆம் திருத்தமும் மாகாண சபையும் எமது அரசியல் அபிலாசைகளுக்கு தீர்வு அல்ல. எமது கட்சியின் நிலைப்பாடும் அதுவே.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளரின் அறிக்கை உள்ளக விசாரணையை வலியுறுத்துவது எமக்கு ஏமாற்றமளிக்கிறது என கடிதத்தில் சொல்லியிருக்கிறோம். இந்த கடிதம் நானும் சுமந்திரனும் மட்டும் கையொப்பம் வைத்து அனுப்பிய கடிதம் அல்ல. எமது கட்சியின் எட்டு பாராளுமன்ற உறுப்பினர்களும் கையொப்பம் வைத்துள்ளனர்.

சமஷ்டி முறையிலான அரசியல் தீர்வை அரசாங்கம் நடைமுறைப்படுத்த வலியுறுத்த வேண்டும் என ஐ.நாவுக்கு கடிதம் எழுதியுள்ளோம். பிறகு எவ்வாறு தமிழ் அரசுக் கட்சி சமஷ்டியை கைவிட்டுவிட்டதாக கூறமுடியும்.

ஏக்கிய ராஜ்ஜிய பாராளுமன்றத்துக்கு கொண்டு வரப்பட்டால் இலங்கை தமிழ் அரசுக் கட்சி எதிர்த்து வாக்களிக்கும். அதேவேளை ஏக்கிய ராஜ்ஜிய ஒற்றையாட்சியும் அல்ல சமஷ்டி ஆட்சியும் அல்ல என்பதை திட்டவட்டமாக தெரிவித்து கொள்கிறோம். ஒருமித்த நாடு என்றால் ஒரு நாடா? ஒன்றுக்கு மேற்பட்டவையையே ஒருமித்த நாடு என்பார். தமிழ் அர்த்தத்தை விட்டு சிங்களத்தை பிடித்து கொண்டிருக்கிறார்கள்.

எனக்கு போதிய அறிவு இருக்கிறது. எனக்கு விளங்காது என கஜேந்திரகுமார் நினைப்பது பொருத்தமற்றது.

1988 நவம்பரில் நிறைவேற்றப்பட்ட சட்ட மூலம் மாகாண சபை நடைமுறையில் உள்ளதுதானே.

அண்மையில் மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவீர்களா என ஊடகவியலாளர்கள் கேள்வி கேட்டபோது, இல்லை கேட்கமாட்டோம் என சொல்லி இருக்கலாம்தானே. அங்கு நான் முதல்வர், உறுப்பினர் என போட்டியிடுகின்றனர். போட்டியிடுவது பற்றி தெளிவாக சொல்லலாமே? ஏன் மழுப்புகின்றார்?

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மீது எனக்கு தனிப்பட்ட மதிப்பு இருக் கிறது. அதை பேண விரும்புகிறேன்.

எங்கள் கட்சி கொள்கையான சமஷ்டி வழிக்கு வந்த கஜேந்திரகுமா ருக்கு நன்றி. சமஷ்டியை நாங்கள் விட்டுக்கொடுக்கவில்லை.

தமிழ் அரசுக் கட்சியை மலினப்படுத்தி அழித்து விடலாம் என்பது பகல் கனவே. தந்தை செல்வா போய் விட்டார். நாங்களும் போய் விடுவோம். ஆனால் தமிழ் அரசுக் கட்சி பலமாக தொடர்ந்து தமிழ் மக்கள் நலனுக்கு குந்தமிழைக்காத வகையில் செயற்படும். எங்களை அடிப்பதில் மினக்கெடாமல் செயல்படுங்கள். - என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## தென்னக்கோன்மீதான வழக்கு டிசெம்பருக்கு ஒத்திவைப்பு!

கொழும்பு, ஒக். 11

தேசபந்து தென்னக்கோன்மீதான வழக்கு விசாரணை டிசெம்பர் மாதத்துக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கடந்த 2023 ஆம் ஆண்டு மாத்தறை, வெலிகம பகுதியில் ஹோட்டல் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டமை தொடர்பில் தேசபந்து தென்னக்கோனுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

மாத்தறை நீதிவான் நீதிமன்றில் நடந்த இந்த வழக்கில் வழக்குடன் தொடர்புடைய தென்னக்கோன் உள்ளிட்ட பிரதிவாதிகள் மன்றில் முன்னிலையாகியிருந்தனர்.

வழக்கு விசாரணை நிறைவில் வழக்கை எதிர்வரும் டிசெம்பர் 17ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார் நீதிவான். (ஐ)

## ஜெனிவா தீர்மான விவகாரம் சபையில் விவாதிக்க இணக்கம்

கொழும்பு, ஒக். 11

ஐ. நா. மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட இலங்கை தொடர்பான பிரேரணை தொடர்பில் பாராளுமன்றில் விவாதம் நடத்துவதற்கு ஆளும் கட்சி இணங்கியுள்ளது.

ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்ட இலங்கை தொடர்பான தீர்மானம், இலங்கை அரசாங்கம் ஏன் வாக்கெடுப்பு கோரவில்லை, உள்ளக பொறிமுறையை வலுப்படுத்துவதற்குரிய திட்டங்கள் தொடர்பான விடயங்கள் சம்பந்தமாக வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் நேற்று முன்தினம் பாராளுமன்றில் விசேட உரையாற்றினார்.

அவரின் உரையின் பின்னர் இது சம்பந்தமாக பாராளுமன்றத்தில் விவாதம் நடத்த இடமளிக்கப்பட வேண்டும் என்று எதிரணி பிரதம கொறடா கயந்த கருணாதிலக கோரிக்க விடுத்தார்.

இதற்கு ஆளும் கட்சி இணங்குகிறது என்று வெளிவிவகார அமைச்சர் பதிலளித்தார். (ஐ)

## மாகாண சபைகள் தேர்தலை நிச்சயமாக நாம் நடத்துவோம்

### பிரதமர் ஹரிணி அமரசூரிய



கொழும்பு, ஒக். 11

மாகாண சபைகள் தேர்தலை நிச்சயம் நடத்துவோம். தேர்தல் குறித்து எவரும் சந்தேகம் கொள்ள வேண்டிய தேவையில்லை. தேர்தலை பிற்போடுவதற்கான அவசியம் எமக்கு கிடையாது. தேர்தலில் காணப்படும் சட்ட சிக்கல்களுக்கு தீர்வு கண்டவுடன் தேர்தல் நடத்தப்படும் - இவ்வாறு பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

இனங்களை பிரித்து முரண்பாடுகளுடன் அரசியல் செய்யும் கலாசாரத்தை முடிவுக்கு கொண்டு வந்து அனைத்து இன மக்களையும் இலங்கையர் என்ற அபிமானத்துடன் ஒன்றிணைத்துள்ளோம். அனைத்து இன மக்களையும் ஒன்றிணைத்து ஜனநாயக பாதையில் பயணிக்கிறோம். வழங்கப்பட்ட வாக்குறுதிகளில் எவற்றுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என்பதை அடையாளப்படுத்தியுள்ளோம். வழங்கிய வாக்குறுதிகள் அனைத்தையும் ஒரே கட்டத்தில் செயல்படுத்த முடியாது.

ஆட்சிக்கு வந்து ஒரு வருட காலத்தில் பல நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளோம். ஜனநாயகத்தை உறுதிப்படுத்துவதற்கு பல நடவடிக்கைகளை மேற்கொண்டோம். எமது ஆட்சியில்தான் அமைதியான முறையில் இரண்டு பிரதான தேர்தல்களை நடத்தினோம். தேர்தல் காலத்தில் ஊரடங்கு சட்டத்தை நாங்கள் பிரயோகிக்கவில்லை. இது சாதாரணமான விடயமல்ல.

மாகாண சபைகள் தேர்தலை நிச்சயம் நடத்துவோம். தேர்தல் குறித்து எவரும் சந்தேகம் கொள்ள வேண்டிய தேவையில்லை. தேர்தலை பிற்போடுவதற்கான அவசியம் எமக்கு கிடையாது. தேர்தலில் காணப்படும் சட்ட சிக்கல்களுக்கு தீர்வு கண்டவுடன் தேர்தல் நடத்தப்படும் - என்று நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் ஆற்றிய உரையில் அவர் தெரிவித்தார். (ஐ)

# ஜே. ஆரின் ஏகாதிபத்திய தேவையே தமிழ் மக்கள்மீதான ஒடுக்குமுறை!

### ரில்வின் சில்வா தெரிவிப்பு



கொழும்பு, ஒக். 11

**1983இல் ஜனாதிபதியாக இருந்த ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்கு ஏகாதிபத்தியவாத அரசாங்கம் ஒன்றை கட்டியெழுப்பவேண்டிய தேவையிருந்தது. அதற்காக தமிழர்கள்மீது ஒடுக்குமுறைகளைப் பிரயோகித்து சிங்கள தேசியவாதத்தை முன்னிலைப்படுத்தினார் - இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.**

நந்தன வீரரத்ன எழுதி மனோ ரஞ்சனால் தமிழில் மொழிபெயர்ப்பு செய்யப்பட்ட "நாட்டை உலுக்கிய 83 கறுப்பு ஜூலையின் ஏழு நாட்கள்" எனும் புலனாய்வு நூல் பற்றிய கலந்துரையாடல் நிகழ்வு கொழும்பு மகாவலி மைய கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில், உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

கறுப்பு ஜூலை பற்றிய இந்த நூலானது மறைக்கப்பட்ட அல்லது திரிபுபடுத்தப்பட்ட வரலாற்றின் உண்மைகளை வெளிக்கொணர்வதற்குப் பங்களிப்புச் செய்யும் வகையில் அமைந்திருக்கிறது. 1983ஆம் ஆண்டு இடம்பெற்ற கறுப்பு ஜூலை கலவரம் தொடர்பில் பல்வேறு மாறுபட்ட கருத்துகள் முன்வைக்கப்படுகின்றன. இதேபோன்று 1988, 1989 களில் இடம்பெற்ற கலவரங்களை "ஜே.வி.பி கலவரம்" என்று அடையாளப்படுத்துகிறார்கள். ஆனால், உண்மையில் நாம் அந்தக் கலவரங்களைத் தோற்றுவிக்கவில்லை. மாறாக அவற்றால் வெகுவாகப் பாதிக்கப்பட்டோர்.

1983 கறுப்பு ஜூலை கலவரத்தால் நான் வெகுவாகப் பாதிக்கப்பட்டேன். அப்போது, நான் எமது கட்சியின் களுத்துறையின் பேருவளை ஒருங்கிணைப்பாளராகவும் முழுநேர கட்சி செயல்பாட்டாளராகவும் இருந்தேன். இருப்பினும், கலவரத்தை அடுத்து எமது கட்சியும் தடை செய்யப்பட்ட கட்சியாக அறிவிக்கப்பட்டது. இதையடுத்து எமது அரசியல் செயல்பாடுகள் முடங்கின. அவற்றை இரகசியமாக முன்னெடுக்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டோம்.

அப்போதைய ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்கு ஏகாதிபத்தியவாத அரசாங்கம் ஒன்றை கட்டியெழுப்பவேண்டிய தேவையிருந்தது. அதற்காக தமிழர்கள்மீது ஒடுக்குமுறைகளைப் பிரயோகித்து, சிங்கள தேசியவாதத்தை முன்னிலைப்படுத்தினார். அதுமாத்திமன்றி, அரசமைப்பின் ஊடாக சகல அதிகாரங்களையும் கொண்ட நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறைமையை அறிமுகப்படுத்தினார். இந்தவேளையில், கொண்டுவரப்பட்ட பயங்கரவாத தடைச் சட்டம் இப்போதும் நடைமுறையில் இருக்கிறது. ஆனால், அதனை நீக்குவதற்கு அவசியமான சகல நடவடிக்கைகளும் எமது அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இவ்வாறு எமக்கும் மக்களுக்கும் எதிராக சகல ஒடுக்குமுறைகளும் திட்டமிட்டு பிரயோகிக்கப்பட்டன.

கறுப்பு ஜூலை கலவரங்கள் ஜே. வி. பியினாலேயே நடத்தப்பட்டதாக பொய்யாக பரப்புரை செய்யப்பட்ட போதிலும் அந்தக் கலவரங்களால் நாம் வெகுவாக பாதிக்கப்பட்டோம் என்பதே உண்மை. ஜே. ஆர். ஜெயவர்த்தன எனும் தனிமனிதனின் அதிகார வெறியால் வடக்கு, கிழக்கு, தெற்கு என எவ்வித பேதமுமின்றி ஒட்டுமொத்த நாடும் பெரும் விலையை செலுத்தியிருக்கிறது -என்றும் கூறினார். (ஐ)

# தமிழ் மக்களின் நம்பிக்கைக்கு துரோகம் இழைக்கமாட்டோம்!

### அமைச்சர் சந்திரசேகர் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 11

தேசிய மக்கள் சக்தி ஆட்சியின் கீழ் நிச்சயம் மாற்றம் வருமென தமிழ் மக்கள் உறுதியாக நம்புகின்றனர். அந்த நம்பிக்கைக்கு ஒருபோதும் துரோகம் இழைக்கமாட்டோம் என்று கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

"இந்நாட்டில் கடந்த 76 வருடகால அரசியலானது மேட்டுக்குடிகள், தனவந்தர்களுக்கு மட்டுமே சொந்தமான அரசியலாக இருந்து வந்தது. இவர்களின் தாளத்துக்கேற்பவே அரசியல்வாதிகள் ஆட்டம் போட்டனர் - ஆட்டுவிக்கப்பட்டனர். இந்நிலைமைய நாம் மாற்றியமைத்துள்ளோம். மேட்டுக்குடிகள் மற்றும் உயர் வர்க்கம் வசமிருந்த அரசியல் சாதாரண மக்கள் மத்தியில் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

எனவே, மக்களை மதிக்கின்ற, மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றுகின்ற, உறுதிமொழிகளுக்கு செயல் வடிவம் கொடுக்கின்ற அரசாங்கமாகவே தேசிய மக்கள் சக்தி திகழ்கிறது. ஆகவே, இந்த அரசாங்கத்தை வீழ்த்துவதற்கு மக்கள் முன்வரமாட்டார்கள். மாறாக அரசாங்கத்தின் பின்னால் அணிதிரண்டு அதன் பயணத்தை வலுப்படுத்திவருகின்றனர்.

ஒரு வருடத்துக்கு முன்னர் இந்நாடு எந்நிலையில் இருந்தது. பல சவால்களுக்கு மத்தியில் நாட்டை மீட்டுள்ளோம். பொருளாதாரத்தை வளப்படுத்திவருகின்றோம். வெளிநாடுகளுக்கு புலம்பெயர்ந்த தமிழர்கள் சுதந்திரமாக நாடு திரும்புவதற்குரிய சூழ்நிலை நிலவுகின்றது.

இனவாத, மதவாத அரசியலுக்கும் முடிவுகட்டப்பட்டுள்ளது. எனவே, கடந்த ஒரு வருடத்தில் நாம் கடந்து வந்த பாதை மகிழ்ச்சியளிக்கிறது. யாழ்ப்பாணத்தில் பல்வேறு அபிவிருத்தி திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

சர்வதேச விளையாட்டு மைதானம்கூட நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது. படையினர் வசமுள்ள காணிகள் விடுவிக்கப்பட்டு வருகின்றன. வடக்கு மக்கள் மத்தியில் நம்பிக்கை கட்டியெழுப்பட்டுள்ளது. அங்குள்ள மக்களின் வாழ்க்கை மேம்பட்டு வருகின்றது." - என்றும் கூறினார்.

## 769 பேர் கைது

கொழும்பு, ஒக். 11

நாடளாவிய ரீதியில் பொலிஸார் முன்னெடுத்த நடவடிக்கையில் 769 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் மா அதிபரின் அறிவுறுத்தலின் பேரில் நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்ட இந்த நடவடிக்கையில் 29 ஆயிரத்து 243 பேர் பரிசோதிக்கப்பட்டனர்.

இதன்போது, சந்தேகத்தின் அடிப்படையில், 769 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அத்துடன், குற்றங்களுடன் தொடர்புடைய 26 பேர் நேரடியாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதேநேரம், பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட 272 பேரும் திறந்த பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட 173 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மதுபோதையில் வாகனம் செலுத்திய 28 பேரும் கவனக்குறைவாக வாகனம் செலுத்திய 20 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேநேரம், ஏனைய போக்குவரத்து குற்றங்களுக்காக 4 ஆயிரத்து 160 பேர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ஐ)

## ரூ. 90 குடிதண்ணீர் போத்தல் விற்றவர் ரூ. 6 இலட்சம் அபராதம் செலுத்தினார்

கொழும்பு, ஒக். 11

கட்டுப்பாட்டு விலையை மீறி குடிதண்ணீர் போத்தலை விற்ற வர்த்தக நிலையத்துக்கு 6 இலட்சம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

70 ரூபாய் நிர்ணயிக்கப்பட்ட 500 மில்லிலீற்றர் குடிதண்ணீர் போத்தலை 90 ரூபாய்க்கு விற்பனை செய்த கொழும்பு - கொலனாவை வர்த்தகருக்கே இந்த அபராதம் விதிக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் இந்த வழக்கு நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. வர்த்தகர் குற்றத்தை ஏற்றுக் கொண்டதையடுத்து அவருக்கு 6 இலட்சம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது. (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 11.10.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org